ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**08.10.2023**

தலைப்புச்செய்திகள்

1. இந்திய விமான படையின் 91-வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோதி விமானபடை வீரர்களுக்கு தமது உளமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

2. மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நான்கு நாள் அரசு முறை பயணமாக நாளை இத்தாலி, ஃபிரான்ஸ் நாடுகளுக்கு செல்கிறார்.

3. தமிழக சட்டப்பேரவையின் சிறப்பு கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

4. ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடம் வகிப்பதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. சென்னையில் நடைபெறும் ஐ.சி.சி உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா இந்தியாவிற்கு எதிராக முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

இனி விரிவான செய்திகள்

***********

விமான படை

இந்திய விமான படையின் 91-வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோதி விடுத்துள்ள செய்தியில் இந்திய விமான படையினரின் வீரம் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு குறித்து நாடு பெருமை கொள்வதாகவும், இவர்களின் சேவை மற்றும் தியாகம் நாட்டின் வான் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் கூறியுள்ளார்.

விமானபடை வீரர்களுக்கு தமது உளமார்ந்த நல்வாழ்த்துக்களை பிரதமர் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் விமான படை தலைமை தளபதி வி.ஆர்.சவுத்ரி விமான படைக்கான புதிய கொடியை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய வி.ஆர்.சவுத்ரி நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு பதில் அளிக்கும் வகையில் விமான படை நவீனபடுத்தப்படுவதாக கூறினார்.

நாட்டில் அமைதியை உறுதி செய்ய விமான படையின் சேவை இன்றியமையாதது என்றார்.

அக்னி வீரர்களுக்கான அடிப்படை பயிற்சி தற்போது நடைபெற்று வருவதாக கூறிய அவர் சுய கற்றல் மற்றும் சுய கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பயிற்சி திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட **C-295** போக்குவரத்து விமானம் விமானப்படையுடன் இணைக்கப்படுவதுடன், **Mig-21** விமானம் விமான படையிலிருந்து இன்று விடுவிக்கப்பட்டது.

இன்று நடைபெற்ற வான் காட்சியில் நாடுமுழுவதும் உள்ள 10 விமான தளங்களிலிருந்து ர∴பேல் போர் விமானங்கள் ஹெலிகாப்டர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட போர் மற்றும் போக்குவரத்து விமானங்களின் சாகச நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

***********

ராஜ்நாத்சிங்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நான்கு நாள் அரசு முறை பயணமாக நாளை இத்தாலி, ∴பிரான்ஸ் நாடுகளுக்கு செல்கிறார்.

முதற்கட்டமாக இத்தாலி செல்லும் அவர் ரோமில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு.**Guido Crisetto**-வை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

அதனை தொடர்ந்து ஃபிரான்ஸ் செல்லும் திரு.ராஜ்நாத்சிங் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளை சந்தித்து பேச உள்ளார்.

***********

எல்.முருகன்

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மீன்பிடி துறைமுகத்தில் சாகர் பரிக்கிரமா திட்டத்தின் ஒருபகுதியாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.பர்ஷோத்தம் ரூபாலா மற்றும் அத்துறைக்கான இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் ஆகியோர் மீனவர்களுக்கான கிஷான் கடன் அட்டைகளை இன்று வழங்கினர்.

தொடர்ந்து படகுமூலம் பூம்புகார் துறைமுகம் சென்ற அமைச்சர்கள் அப்பகுதி மீனவர்களிடையே கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்தனர்.

***********

ஆதித்யா

சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல்.1 விண்கலம் திட்டமிட்டபடி செயல்பட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு.சோம்நாத் தெரிவித்துள்ளார்.

டிவிட்டரில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இன்னும் 18 நாட்களில் இந்த விண்கலம் எல்.1 புள்ளியை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

காஸ்மிக் எக்ஸ் கதிர்களின் துருவ முனையை ஆய்வு செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட எக்ஸ்ரே போலரி மீட்டர் செயற்கைகோள் வரும் டிசம்பர் மாதம் விண்ணில் ஏவப்பட உள்ளதாக அவர் கூறினார்.

***********

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவையின் சிறப்பு கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

காவிரி விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தனி தீர்மானம் கொண்டுவருவார் என தெரிகிறது.

இக்கூட்டத்தொடரில் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகிறது.

முன்னதாக பேரவையில் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

அதனை தொடர்ந்து இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வு குழு நாளை கூடி முடிவு செய்யும்.

***********

கே.என்.நேரு

ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடம் வகிப்பதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் 48 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைக்கும் வகையில் கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

தொடர்ந்து தூத்துகுடி மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 200 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு கட்டிடங்களை இன்று திறந்துவைத்தார்.

நேரு வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில நிதித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தூத்துக்குடி மாவட்டத்தில் பசுமை அமோனியா திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொழில் வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

தென்னரசு வாய்ஸ்

***********

உதயநிதி ஸ்டாலின்

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நல திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என மாநில

விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சிந்தாதிரி பேட்டை, புளியந்தோப்பு ஆகிய இடங்களில் 898 புதிய குடியிருப்புகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர்,

காலை உணவு திட்டத்தின் கீழ் 17 லட்சம் குழந்தைகளும்,

மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் ஒன்றரை கோடி பெண்களும் பயனடைவதாக கூறினார்.

***********

வெடிவிபத்து நிவாரணம்

தமிழக கர்நாடக எல்லை பகுதியான அத்திப்பள்ளி பட்டாசு கிடங்கில் நேரிட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த தர்மபுரி, வாணியம்பாடி, கள்ளக்குறிச்சி ஒசூரை சேர்ந்த 14 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாநில மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று நேரில் வழங்கினார்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு கர்நாடக அரசு சார்பில் தலா 5 லட்ச ரூபாய் வழங்கப்படும் என்று கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.சித்தராமையா தெரிவித்துள்ளார்.

இதனிடையே பட்டாசு கிடங்கு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 5 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

***********

நாகை

நாகை - இலங்கை இடையே பயணியர் கப்பல் போக்குவரத்துக்கான சோதனை ஓட்டம் இன்று தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

அன்புமணி ராமதாஸ்

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில் இக்கூட்டத்தொடரில் சேவை உரிமை சட்டத்திற்கான முன்வரைவு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று பா.ம.க தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு நிர்வாகத்தில் ஊழலை அகற்றுவதற்கான இச்சட்டம் கேரளம், கர்நாடகம் உட்பட 20 மாநிலங்களில் நடைமுறையில் உள்ளதை சுட்டிக்காட்டினார்.

***********

தகவல் அறியும் உரிமை

தகவல் அறியும் உரிமை சட்ட வார விழாவை ஒட்டி இன்று மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் 200க்கும் மேற்பட்ட மாணாக்கர், போக்குவரத்து கழக ஊழியர்கள், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தீயணைப்புத்துறை சார்பில் நாமக்கல் சேலம் ம மாவட்டங்களில் நடைபெற்ற வாக்கத்தான் மற்றும் மாரத்தான் போட்டிகளில் அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் பங்கேற்றனர்.

விழுப்புரத்தில் நகராட்சி மற்றும் நுகர்பொருள் வாணிப கழகம் இணைந்து நடத்திய விழிப்புணர்வு பேரணி புதிய பேருந்து நிலையம் முதல் அரசு தலைமை மருத்துவமனை வரை நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் காவல்துறை சார்பில் நடைபெற்ற வாக்கத்தான் போட்டியில் 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியல் தாலுக்கா அலுவலகம் சார்பில் மினிமாரத்தான் போட்டி நடைபெற்றது.

***********

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உதவி தொகை பெற அடுத்த மாதம் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரவன் குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜல்ஜீவன் திட்ட பணிகளை விரைவு படுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் மலேசிய கோலாலம்பூரிலிருந்து வந்த பயணியிடமிருந்து ஒருகோடியே 80 லட்ச ரூபாய் மதிப்பிலான இரண்டு கிலோ தங்கத்தை சுங்கத்துறையினர் இன்று பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரோப்கார் சேவை இன்று மீண்டும் தொடங்கப்பட்டது.

***********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி தர்மபுரி திருப்பத்தூர், சேலம் நாமக்கல் திருச்சி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

***********

கிரிக்கெட்

சென்னையில் நடைபெறும் **ICC** உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்னும் சற்று நேரத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

முன்னதாக டாஸ் வென்ற ஆஸ்திரேலியா இந்தியாவிற்கு எதிராக முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

***********

ஆசிய விளையாட்டு

சீன ஹாங்ஸூ ஆசிய விளையாட்டு போட்டிகள் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

மாலை நடைபெறும் நிறைவு நாள் நிகழ்ச்சியில் இந்திய ஆடவர் ஹாக்கி கோல் கீப்பர் **P.R. Sreejesh** தேசிய கொடியை ஏந்தி செல்ல இந்திய வீர வீராங்கனைகள் அணிவகுத்து செல்கின்றனர்.

கடந்த மாதம் 23ஆம் தேதி தொடங்கிய இப்போட்டிகளில் இந்தியா 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் உட்பட 107 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ளது.

இப்போட்டிகளில் பதக்கம் வென்ற வீர வீராங்கனைகளுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோதி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.அனுராக்சிங் தாக்கூர், முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********